# அருண்மொழிவர்மன்

## சுதர்சன் ஸ்ரீநிவாசன்



*https://arunmozhivarman.com*

---

சுதர்சன் ஸ்ரீநிவாசன் என்பது இயற்பெயர் ஆயினும் **அருண்மொழிவர்மன்** என்ற பெயரிலேயே சமூக, கலை, இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றேன். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் **1990** முதல் **1997** வரை (ஆண்டு 6 முதல் 12 வரை) கல்விகற்றேன் (**1998 பிரிவு**).

சமூகச் செயற்பாடுகளில் **ஆவணப்படுத்தல், மரபுரிமை, அமைப்பாக்கம், சமூக நீதி** ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுப்பதோடு அவற்றை சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் செயற்படுத்துவதையும் வலியுறுத்திவருகின்றேன். “தாயகக் கனவுகள்” என்கிற எனது கட்டுரைத் தொகுப்பு 2022 இல் வெளிவந்திருந்தது. அடுத்த இரண்டு நூல்கள் 2024 இன் தொடக்கத்தில் வெளிவர இருக்கின்றன.

தற்போது தாய்வீடு பத்திரிகையின் ஆலோசகர் குழு உறுப்பினராகவும் புதிய சொல் இதழின் ஆசிரியர்களில் ஒருவராகவும் விதை குழுமம், பகு பதம் ஆகிய அமைப்புகளின் அங்கத்தவராகவும் செயற்பட்டுவருகிறேன். எழுநா ஊடக நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவராக 2012 – 2015 வரையான காலப்பகுதியிலும் நூலக நிறுவனத்தின் வழிகாட்டுனர் சபை, இயக்குனர் சபை ஆகியவற்றின் அங்கத்தவராக 2011 – 2021 வரையான காலப்பகுதியிலும் நூலகம் கனடாவின் இயக்குனர்களில் ஒருவராக 2011 – 2020 வரையான காலப்பகுதியிலும் அங்கம் வகித்துள்ளேன்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சங்கம் கனடாவின் நிர்வாகக் குழு உறுப்பினராக **2018** முதல் அங்கம் வகிப்பதோடு **2023** இல் **உப செயலாளராகவும்** அங்கம் வகித்துள்ளேன். இந்தக் காலப்பகுதிகளில் சங்கத்தின் **யாப்புச் சீர்திருத்தம், உப விதிகள் மாற்றம்** ஆகியவற்றுக்குப் பங்களித்துள்ளேன். பொதுவேலைகளில் **வெளிப்படைத் தன்மையை** வலியுறுத்தும் நான், சங்கத்தின் **நிர்வாக சபைக் கூட்ட அறிக்கைகளை** சங்கத்தின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் அனுப்பவேண்டும் என்பதை வலியுறுத்திவந்தேன், 2022 செப்ரம்பர் – 2023 டிசம்பர் வரையிருந்த நிர்வாக சபை இதை நடைமுறைப்படுத்தியும் இருந்தது. இவ்வாண்டு செயலாளராகத் தேர்வானால் சங்கத்தின் அமைப்பாக்கத்தை இன்னும் திடப்படுத்துவதோடு, நிர்வாகசபைக் கூட்ட நடவடிக்கைகளின் **இன்னமும் அதிக வெளிப்படைத்தன்மையை** உறுதிப்படுத்துவேன்.